உ
சிவமயம்



சுன்னாகம் சங்கரப்பிள்ளை மண்டலநாயகத்தின்
பிரியபத்தினி

## திருமதி

## இரத்தினதேவி மண்டலநாயகம்

அவர்கள்

சிவபதம் பெற்றமை குறித்த

# நினைவு மலர்

## 16-06-1988

The Souvenir in memory of the late

***Mrs. Ratnadevi Mandalanayagam***

Chunnakam

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

கனக தண்டிகைக் கனகராய முதலியார் வழிவந்த

## சுன்னாகம் சங்கரப்பிள்ளை மண்டலநாயகத்தின்

## பிரியபத்தினியும்

இளவாலை தண்டிகை முதலியார் வழிவந்த

புன்னாலைக்கட்டுவன்

# திருமதி

# இரத்தினதேவி மண்டலநாயகம்

அவர்கள்

## சிவபதம் பெற்றமை குறித்த

# நினைவு மலர்

## 16-06-1988

## The Souvenir

## in memory of the late

## *Mrs. Ratnadevi Mandalanayagam*

"Mayooran"
Mylani lane,
Chunnakam

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



# திருமதி இரத்தினதேவி மண்டலநாயகம்

தோற்றம்
11-01-1918

மறைவு
17-05-1988

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
கணபதி துணை

# ஔவைப் பிராட்டியார் அருளிச் செய்த
# விநாயகர் அகவல்

சீதக் களபச் செந்தா மரைப்பூம்
பாதச் சிலம்பு பலவிசை பாடப்
பொன்னரை ஞாணும் பூந்துகி லாடையும்
வன்ன மருங்கில் வளர்ந்தழ கெறிப்பப்
பேழை வயிறும் பெரும்பாரக் கோடும்
வேழ முகமும் விளங்குசிந் தூரமும்
அஞ்சு கரமும் அங்குச பாசமும்
நெஞ்சிற் குடிகொண்ட நீல மேனியும்
நான்ற வாயும் நாலிரு புயமும்
மூன்று கண்ணும் மும்மதச் சுவடும்
இரண்டு செவியும் இலங்குபொன் முடியும்
திரண்டமுப் புரிநூல் திகழொளி மார்பும்
சொற்பதங் கடந்த துரியமெய்ஞ் ஞான
அற்புதன் ஈன்ற கற்பகக் களிறே
முப்பழ நுகரும் மூஷிக வாகன
இப்பொழு தென்னை ஆட்கொள வேண்டித்
தாயாய் எனக்குத் தானெழுந் தருளி
மாயாப் பிறவி மயக்க மறுத்துத்
திருந்திய முதலைந் தெழுத்துந் தெளிவாய்ப்
பொருந்தவே வந்தென் உளந்தனிற் புகுந்து
குருவடி வாகிக் குவலயந் தன்னில்
திருவடி வைத்துத் திறமிது பொருளென
வாடா வகைதான் மகிழ்ந்தெனக் கருளிக்
கோடா யுதத்தாற் கொடுவினை களைந்தே
உவட்டா உபதேசம் புகட்டியென் செவியில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெவிட்டாத ஞானத் தெளிவையுங் காட்டி
ஐம்புலன் தன்னை அடக்கு முபாயம்
இன்புறு கருணையின் இனிதெனக் கருளிக்
கருவிக ளொடுங்குங் கருத்தினை யறிவித்து
இருவினை தன்னை யறுத்திருள் கடிந்து
தலமொரு நான்குந் தந்தெனக் கருளி
மலமொரு மூன்றின் மயக்க மறுத்தே
ஒன்பது வாயில் ஒருமந் திரத்தால்
ஐம்புலக் கதவை யடைப்பதுங் காட்டி
ஆறா தாரத் தங்குச நிலையும்
பேறா நிறுத்திப் பேச்சுரை யறுத்தே
இடைபிங் கலையின் எழுத்தறி வித்துக்
கடையில் சுழுமுனைக் கபாலமுங் காட்டி
மூன்றுமண் டலத்தின் முட்டிய தூணின்
நான்றெழு பாம்பின் நாவி லுணர்த்திக்
குண்டலி யதனிற் கூடிய அசபை
விண்டெழு மந்திரம் வெளிப்பட உரைத்து
மூலா தாரத்தின் மூண்டெழு கனலைக்
காலா லெழுப்புங் கருத்தறி வித்தே
அமுத நிலையும் ஆதித்தன் இயக்கமும்
குமுத சகாயன் குணத்தையுங் கூறி
இடைச் சக்கரத்தின் ஈரெட்டு நிலையும்
உடற்சக் கரத்தின் உறுப்பையுங் காட்டிச்
சண்முக தூலமுஞ் சதுர்முக சூக்கமும்
எண்முக மாக இனிதெனக் கருளிப்
விரியட்ட காயம் புலப்பட எனக்குத்
தெரியெட்டு நிலையுந் தெரிசனப் படுத்திக்
கருத்தினிற் கபால வாயில் காட்டி
இருத்தி முத்தி யினிதெனக் கருளி
என்னை யறிவித் தெனக்கருள் செய்து
முன்னை வினையின் முதலைக் களைந்து
வாக்கு மனமும் இல்லா மனோலயம்
தேக்கியே யென்றன் சிந்தை தெளிவித்து
இருள்வெளி யிரண்டுக் கொன்றிட மென்ன
அருள்தரு மானந்தத் தழுத்தியென் செவியில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லை யில்லா ஆனந்த மளித்து
அல்லல் களைந்தே யருள்வழி காட்டிச்
சத்தத்தி னுள்ளே சதாசிவங் காட்டி
சித்தத்தினுள்ளே சிவலிங்கம் காட்டி
அணுவுக் கணுவாய் அப்பா லுக் கப்பாலாய்க்
கணுமுற்றி நின்ற கரும்புள்ளே காட்டி
வேடமும் நீறும் விளங்க நிறுத்திக்
கூடுமெய்த் தொண்டர் குழாத்துடன் கூட்டி
அஞ்சக் கரத்தின் அரும்பொருள் தன்னை
நெஞ்சக் கருத்தின் நிலையறி வித்துத்
தத்துவ நிலையைத் தந்தெனை யாண்ட
வித்தக விநாயக விரைகழல் சரணே

உ

# தேவாரம்

பிடியதன் உருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடும் அவரிடர்
கடிகண பதிவர அருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை இறையே.

தோடுடைய செவியன் விடையேறியோர் தூவெண் மதிசூடிக்
காடுடைய சுடலைப் பொடிபூசியென் உள்ளங் கவர்கள்வன்
ஏடுடைய மலரான்முனை நாட்பணிந் தேத்த அருள் செய்த
பீடுடைய பிரமாபுர மேவிய பெம்மான் இவன் அன்றே.

உற்றுமை சேர்வது மெய்யினையே உணர்வது நின்னருள்
மெய்யினையே
கற்றவர் சுாய்வது காமனையே கயல்விழி காய்வது
காமனையே
அற்ற மறைப்பது முன்பணியே அமரர்கள் செய்வதும்
உன்பணியே
பெற்றுமுகந்தது கந்தனையே பிரமபுரத்தை யுகந்தனையே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலைபெறுமாறு எண்ணுதியேல் நெஞ்சே நீவா
நித்தலும் எம்பிரானுடைய கோயில் புக்குப்
புலர்வதன்முன் அலகிட்டு மெழுக்கு மிட்டுப்
பூமாலை புனைந்தேத்திப் புகழ்ந்து பாடித்
தலையாரக் கும்பிட்டுக் கூத்துமாடிச்
சங்கரா சய போற்றி போற்றி என்றும்
அலைபுனல் சேர் செஞ்சடை எம்ஆதி என்றும்
ஆரூரா என்றென்றே அலறா நில்லே.

நத்தார்படை ஞானன்பசு வேறின்நனை கவிழ்வாய்
மத்தம்மத யானையுரி போர்த்த மணவாளன்
பத்தாகிய தொண்டர்தொழு பாலாவியின் கரைமேல்
செத்தாரெலும் பணிவார் திருக் கேதீச்சரத்தானே.

நிரைகழல் அரவஞ் சிலம்பொலி யலம்பு
நிமலர்நீ றணிதிரு மேனி
வரைகெழு மகளோர் பாகமாப் புணர்ந்த
வடிவினர் கொடியணி விடையர்
கரைகெழு சந்தும் காரகிற் பிளவு
மளப்பரும் கன்மணி வரன்றிக்
குரைகட லோதம் நித்திலம் கொழிக்கும்
கோணமா மலையமர்ந் தாரே

கல்லூர்ப் பெருமணம் வேண்டா கழுமலம்
பல்லூர்ப் பெருமணம் பாட்டு மெய்யாய்த்தில
சொல்லூர்ப் பெருமணஞ் சூடல ரேதொண்டர்
நல்லூர்ப் பெருமணம் மேய நம்பானே.

மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈசன் எந்தை இணையடி நீழலே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மந்திரமாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தரமாவது நீறு துதிக்கப்படுவது நீறு
தந்திரமாவது நீறு சமயத்திலுள்ளது நீறு
செந்துவர் வாயுமைபங்கன் திருஆலவாயான் திருநீறே.

ஆடினாய் நறுநெய்யொடு பால்தயிர்
அந்தணர் பிரியாத சிற்றம்பலம்
நாடினாயிடமா நறுங் கொன்றை நயந்தவாறே
பாடினாய் மறையொடு பல் கீதமும்
பல்சடைப் பனிகால் கதிர் வெண்டிங்கள்
சூடினாய் அருளாய் சுருங்கவெம் தொல்வினையே!

முன்னம் அவனுடைய நாமம் கேட்டாள்
மூர்த்தி அவனிருக்கும் வண்ணங் கேட்டாள்
பின்னை அவனுடைய ஆரூர் கேட்டாள்
பெயர்த்தும் அவனுக்கே பிச்சியானாள்
அன்னையையும் அத்தனையும் அன்றே நீத்தாள்
அகன்றாள் அகலிடத்தார் ஆசாரத்தை
தன்னை மறந்தாள் தன்நாமங் கெட்டாள்
தலைப்பட்டாள் நங்கை தலைவன் தாளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவாசகம்

தொல்லை இரும்பிறவிச் சூழுந் தளைநீக்கி
அல்லலறுத் தானந்தம் ஆக்கியதே — எல்லை
மருவா நெறியளிக்கும் வாதவூர் எங்கோன்
திருவா சகமென்னுந் தேன்.

# சிவபுராணம்

திருச்சிற்றம்பலம்

நமச்சிவாய வாழ்க நாதன்றாள் வாழ்க
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க
கோகழி யாண்ட குருமணிதன் தாள்வாழ்க
ஆகமம் ஆகிநின் (று) அண்ணிப்பான் தாள்வாழ்க
ஏக னநேகன் இறைவன் அடிவாழ்க
வேகங் கெடுத்(து) ஆண்ட வேந்தனடி வெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்றன் பூங்கழல்கள் வெல்க
கரங்குவிவா ருண்மகிழுங் கோன்கழல்கள் வெல்க
சிரங்குவிவா ரோங்குவிக்கும் சீரோன் கழல் வெல்க
ஈசன் அடிபோற்றி எந்தை அடிபோற்றி
தேசனடி போற்றி சிவன்சே வடிபோற்றி
நேயத்தே நின்ற நிமலன் அடிபோற்றி
மாயப் பிறப்பறுக்கு மன்ன னடிபோற்றி
சீரார் பெருந்துறைநந் தேவ னடிபோற்றி
ஆராத இன்பம் அருளுமலை போற்றி
சிவன்அவன்என் சிந்தையுள் நின்ற அதனால்
அவன்அரு ளாலே அவன்றாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுரா ணந்தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய வுரைப்பனியான்
கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற் (கு) எட்டா எழில்ஆர் கழலிறைஞ்சி
விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங்கு (கு) ஒளியாய்
எண்ணிறந்(து) எல்லை இலாதானே நின்பெருஞ்சீர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொல்லா வினையேன் புகழுமா றொன்றறியேன்
புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பலவிருகம் ஆகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்அசுரர் ஆகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்றவித் தாவரசங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்து இளைத்தே னெம்பெருமான்
மெய்யேயுன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்யவென் னுள்ளத்துள் ஓங்கார மாய்நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா, எனஓங்கி ஆழ்ந் (து) அகன்ற நுண்ணியனே
வெய்யாய் தணியாய் இயமான னும்விமலா
பொய்யா யினஎல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானந் தன்னை அகல்விக்கும் நல்லறிவே
ஆக்க மளவிறுதி யில்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள் தருவாய்
போக்குவா யென்னைப் புகுவிப்பாய் நின்றொழும்பின்
நாற்றத்தி னேரியாய் சேயாய் நணியானே
மாற்ற மனங்கழிய நின்ற மறையோனே
கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்களோ ரைந்துடையாய் விண்ணோர்க ளேத்த
மறைந்திருந்தா யெம்பெருமான் வல்வினையேன் தன்னை
மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவ மென்னும் அருங்கயிற்றாற் கட்டிப்
புறந்தோல் போர்த் தெங்கும் புழுவழுக்குமூடி
மலஞ்சோரு மொன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா வுனக்குக்
கலந்த அன்பாகிக் கசிந்துள் ளுருகும்
நலந்தா னிலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்
தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனா ரமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள்புரிந்து நெஞ்சில்வஞ் சங்கெடப்
பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா வமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதா ருள்ளத் தொளிக்கும் ஒளியானே
நீரா யுருக்கியென் ஆருயிராய் நின்றானே
இன்பமுந் துன்பமும் இல்லானே உள்ளானே
அன்பருக் கன்பனே யாவையுமா யல்லையுமாம்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே யந்த நடுவாகி யல்லானே
ஈர்த்தென்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்தமெஞ் ஞானத்தாற் கொண்டுணர்வார் தங்கருத்தின்
நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே
காக்குமெங் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தாமிக் காய்நின்ற
தோற்றச் சுடரொளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வாய்
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவேயென் சிந்தனையுள்
ஊற்றான வுண்ணா ரமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பி னுட்கிடப்ப
ஆற்றேனெம் மையா அரனேயோ என்றென்று
போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பைக் கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடு நாதனே
தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே
அல்லற்பிறவி யறுப்பானே ஓவென்று
சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தி னுள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# திருவெம்பாவை

திருச்சிற்றம்பலம்

ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ்
சோதியை யாம்பாடக் கேட்டேயும் வாட்டடங்கண்
மாதே வளருதியோ வன்செவியோ நின்செவிதான்
மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்தொலிபோய்
வீதிவாய்க் கேட்டலுமே விம்மிவிம்மி மெய்ம்மறந்து
போத ரமளியின்மேல் நின்றும் புரண்டிங்கன்
ஏதேனும் ஆகாள் கிடந்தாளென் னேயென்னே
ஈதேயெந் தோழி பரிசேலோ ரெம்பாவாய். 1

பாசம் பரஞ்சோதிக் கென்பா யிராப்பகலும்
பேசும்போ தெப்போதிப் போதா ரமளிக்கே
நேசமும் வைத்தனையோ நேரிழையாய் நேரிழையீர்
சீசி யிவையுஞ் சிலவோ விளையாடி
யேசு மிடமீதோ விண்ணோர்க ளேத்துதற்குக்
கூசு மலர்ப்பாதந் தந்தருள வந்தருளுந்
தேசன் சிவலோகன் தில்லைச்சிற் றம்பலத்து
ளீசனார்க் கன்பார்யா மாரேலோ ரெம்பாவாய். 2

முத்தன்ன வெண்ணகையாய் முன்வந் தெதிரெழுந்தென்
னத்தனா னந்த னமுதனென் றள்ளூறித்
தித்திக்கப் பேசுவாய் வந்துன் கடைதிறவாய்
பத்துடையீ ரீசன் பழவடியீர் பாங்குடையீர்
புத்தடியோம் புன்மைதீர்ந் தாட்கொண்டாற்பொல்லாதோ
வெத்தோநின் னன்புடைமை யெல்லோ மறியோமோ
சித்தமழகியார் பாடாரோ நஞ்சிவனை
யித்தனையும் வேண்டு மெமக்கேலோ ரெம்பாவாய். 3



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒண்ணித் திலநகையா யின்னம் புலர்ந்தின்றோ
வண்ணக் கிளிமொழியா ரெல்லாரும் வந்தாரோ
வெண்ணிக்கொ டுள்ளவா சொல்லுகோ மவ்வளவுங்
கண்ணைத் துயின்றவமே காலத்தைப் போக்காதே
விண்ணுக் கொருமருந்தை வேத விழுப்பொருளைக்
கண்ணுக் கினியானைப் பாடிக் கசிந்துள்ள
முண்ணெக்கு நின்றுருக யாமாட்டோம் நீயேவந்
தெண்ணிக் குறையிற் றுயிலேலோ ரெம்பாவாய்.

மாலறியா நான்முகனுங் காணா மலையினைநாம்
போலறிவோ மென்றுள்ள பொக்கங்க ளேபேசும்
பாலூறு தேன்வாய்ப் படிறீ கடைதிறவாய்
ஞாலமே விண்ணே பிறவே யறிவரியான்
கோலமு நம்மையாட் கொண்டருளிக் கோதாட்டுஞ்
சீலமும் பாடிச் சிவனே சிவனேயென்
றோல மிடினு முணரா யுணராய்கா
ணேலக் குழலி பரிசேலோ ரெம்பாவாய். 5

மானேநீ நென்னலை நாளைவந் துங்களை
நானே யெழுப்புவ னென்றலு நாணுமே
போன திசைபகரா யின்னம் புலர்ந்தின்றோ
வானே நிலனே பிறவே யறிவரியான்
றானேவந் தெம்மைத் தலையளித்தாட் கொண்டருளும்
வான்வார் கழல்பாடி வந்தோர்க்குன் வாய்திறவா
யூனே யுருகா யுனக்கே யுறுமெமக்கு
மேனோர்க்குந் தங்கோனைப் பாடேலோ ரெம்பாவாய். 6

அன்னே யிவையுஞ் சிலவோ பலவமர
ருன்னற் கரியா னொருவ னிருஞ்சீரான்
சின்னங்கள் கேட்பச் சிவனென்றே வாய்திறப்பாய்
தென்னாவென் னாமுன்னந் தீசேர் மெழுகொப்பா
யென்னானை யென்னரைய னின்னமுதென் றெல்லோமுஞ்
சொன்னோங்கேள் வெவ்வேறா யின்னந் துயிலுதியோ
வன்னெஞ்சப் பேதையர்போல் வாளா கிடத்தியா
லென்னே துயிலின் பரிசேலோ ரெம்பாவாய். 7



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோழி சிலம்பச் சிலம்புங் குருகெங்கு
மேழி லியம்ப வியம்பும்வெண் சங்கெங்குங்
கேழில் பரஞ்சோதி கேழில் பரங்கருணை
கேழில் விழுப்பொருள்கள் பாடினோங் கேட்டிலையோ
வாழியீ தென்ன வுறக்கமோ வாய்திறவா
யாழியா னன்புடைமை யாமாறு மிவ்வாறோ
ஊழி முதல்வனாய் நின்ற வொருவனை
யேழைபங் காளனையே பாடேலோ ரெம்பாவாய். 8

முன்னைப் பழம்பொருட்கு முன்னைப் பழம்பொருளே
பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப் பெற்றியனே
யுன்னைப் பிரானாகப் பெற்றவுன் சீரடியோம்
உன்னடியார் தாள்பணிவோ மாங்கவர்க்கேபாங்காவோ
மன்னவரே யெங்கணவ ராவா ரவருகந்து
சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணிசெய்வோ
மின்ன வகையே யெமக்கெங்கோ னல்குதியே
லென்ன குறையு மிலோமேலோ ரெம்பாவாய். 9

பாதாள மேழினுங்கீழ் சொற்கழிவு பாதமலர்
போதார் புனைமுடியு மெல்லாப் பொருண்முடிவே
பேதை யொருபாற் றிருமேனி யொன்றல்லன்
வேதமுதல் விண்ணோரு மண்ணுந் துதித்தாலு
மோத வுலவா வொருதோழன் றொண்டருளன்
கோதில் குலத்தரன்றன் கோயிற் பிணாப்பிள்ளைகா
ளேதவனூ ரேதவன்பே ராருற்றா ராரயலா
ரேதவனைப் பாடும் பரிசேலோ ரெம்பாவாய். 10

மொய்யார் தடம்பொய்கை புக்கு முகேரென்னக்
கையாற் குடைந்து குடைந்துன் கழல்பாடி
ஐயா வழியடியோம் வாழ்ந்தோங்கா ணாரழல்போற்
செய்யாவெண் ணீறாடி செல்வா சிறுமருங்குன்
மையார் தடங்கண் மடந்தை மணவாளா
வையாநீ யாட்கொண் டருளும் விளையாட்டி
னுய்வார்க ளுய்யும் வகையெல்லா முய்ந்தொழிந்தோ
மெய்யாமற் காப்பா யெமையேலோ ரெம்பாவாய் 11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆர்த்த பிறவித் துயர்கெடநா மார்த்தாடுந்
தீர்த்தனற் றில்லைச்சிற் றம்பலத்தே தீயாடுங்
கூத்தனிவ் வானுங் குவலயமு மெல்லோமுங்
காத்தும் படைத்துங் கரந்தும் விளையாடி
வார்த்தையும் பேசி வளைசிலம்ப வார்கலைக
ளார்ப்பரவஞ் செய்ய வணிகுழன்மேல் வண்டார்ப்பப்
பூத்திகழும் பொய்கை குடைந்துடையான் பொற்பாத
மேத்தி யிருஞ்சுனைநீ ராடேலோ ரெம்பாவாய். 12

பைங்குவளைக் கார்மலராற் செங்கமலப் பைம்போதா
லங்கங் குருகினத்தாற் பின்னு மரவத்தாற்
றங்கண் மலங்கழுவு வார்வந்து சார்தலினா
லெங்கள் பிராட்டியு மெங்கோனும் போன்றிசைந்த
பொங்கு மடுவிற் புகப்பாய்ந்து பாய்ந்துநஞ்
சங்கஞ் சிலம்பச் சிலம்பு கலந்தார்ப்பக்
கொங்கைகள் பொங்கக் குடையும் புனல்பொங்கப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய். 13

காதார் குழையாடப் பைம்பூண் கலனாடக்
கோதை குழலாட வண்டின் குழாமாடச்
சீதப் புனலாடிச் சிற்றம் பலம்பாடி
வேதப் பொருள்பாடி யப்பொருளா மாபாடிச்
சோதி திறம்பாடிச் சூழ்கொன்றைத் தார்பாடி
யாதி திறம்பாடி யந்தமா மாபாடிப்
பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளை தன்
பாதத் திறம்பாடி ஆடேலோ ரெம்பாவாய். 14

ஓரொருகா லெம்பெருமா னென்றென்றே நம்பெருமான்
சீரொருகால் வாயோவாள் சித்தங் களிகூர
நீரொருகா லோவா நெடுந்தாரை கண்பனிப்பப்
பாரொருகால் வந்தனையாள் விண்ணோரைத் தான்பணியாள்
பேரரையற் கிங்ஙனே பித்தொருவ ராமாறு
மாரொருவ ரிவ்வண்ண மாட்கொள்ளும் வித்தகர்தாள்
வாருருவப் பூண்முலையீர் வாயார நாம்பாடி
யேருருவப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னிக் கடலைச் சுருக்கி யெழுந்துடையா
ளென்னத் திகழ்ந்தெம்மை யாழுடையா ளிட்டிடையின்
மின்னிப் பொலிந்தெம் பிராட்டி திருவடிமேற்
பொன்னஞ் சிலம்பிற் சிலம்பித் திருப்புருவ
மென்னச் சிலைகுலவி நந்தம்மை யாளுடையா
டன்னிற் பிரிவிலா வெங்கோமா னன்பர்க்கு
முன்னி யவணமக்கு முன்சுரக்கு மின்னருளே
யென்னப் பொழியாய் மழையேலோ ரெம்பாவாய்.

செங் கணவன்பாற் றிசைமுகன்பாற் றேவர்கள்பா
லெங்கு மிலாததோ ரின்பநம் பாலதாக்
கொங்குண் கருங்குழலி நந்தம்மைக் கோதாட்டி
யிங்குநம் மில்லங்க டோறு மெழுந்தருளிச்
செங்கமலப் பொற்பாதந் தந்தருளுஞ் சேவகனை
யங்கண் ணரசை யடியோங்கட் காரமுதை
நங்கள் பெருமானைப் பாடி நலந்திகழப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய்.

அண்ணா மலையா னடிக்கமலஞ் சென்றிறைஞ்சும்
விண்ணோர் முடியின் மணித்தொகைவீ றற்றாற்போற்
கண்ணா ரிரவி கதிர்வந்து கார்கரப்பத்
தண்ணா ரொளிமழுங்கித் தாரகைக டாமகலப்
பெண்ணாகி யாணா யலியாய்ப் பிறங்கொளிசேர்
விண்ணாகி மண்ணாகி யித்தனையும் வேறாகிக்
கண்ணா ரமுதமுமாய் நின்றான் கழல்பாடிப்
பெண்ணேயிப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய்

உங்கையிற் பிள்ளை யுனக்கே யடைக்கலமென்
றங்கப் பழஞ்சொற் புதுக்குமெம் மச்சத்தா
லெங்கள் பெருமா னுனக்கொன் றுரைப்போங்கே
ளெங்கொங்கை நின்னன்ப ரல்லாற் தோள் சேரற்க
வெங்கை யுனக்கல்லா தெப்பணியுஞ் செய்யற்க
கங்குல் பகலெங்கண் மற்றொன்றுங் காணற்க
விங்கிப் பரிசே யெமக்கெங்கோ னல்குதியே
லெங்கெழிலென் ஞாயி றெமக்கேலோ ரெம்பாவாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போற்றி யருளுகநின் னாதியாம் பாதமலர்
போற்றி யருளுகநின் னந்தமாஞ் செந்தளிர்கள்
போற்றியெல் லாவுயிர்க்குந் தோற்றமாம் பொற்பாதம்
போற்றியெல் லாவுயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்
போற்றியெல் லாவுயிர்க்கு மீறு மிணையடிகள்
போற்றிமால் நான்முகனுங் காணாத புண்டரிகம்
போற்றியா முய்யவாட் கொண்டருளும் பொன்மலர்கள்
போற்றியாம் மார்கழிநீ ராடேலோ ரெம்பாவாய். 20

திருச்சிற்றம்பலம்

# திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே உலப்பிலா ஒன்றே
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரண்மணிக் குன்றே
சித்தத்துள் தித்திக்குந் தேனே
அளிவளர் உள்ளத் தானந்தக் கனியே
அம்பலம் ஆடரங்காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளங்கே.

கற்றவர் விழுங்குங் கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணைமா கடலை
மற்றவ ரறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்றவெஞ் சிவனைத்
திருவீழி மிழலைவீற் றிருந்த
கொற்றவன் றன்னைக் கண்டுகண் டுள்ளங்
குளிரவென் கண்குளிர்ந் தனவே.

# திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டி யழுதிடப்
பாற்கட லீந்தபிரான்
மாலுக்குச் சக்கர மன்றருள் செய்தவன்
மன்னிய தில்லை தன்னு
ளாலிக்கு மந்தணர் வாழ்கின்ற சிற்றம்
பலமே யிடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல் லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

உலகெலா முணர்ந் தோதற் கரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்
மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம்.

## திருப்புகழ்

இறவாமற் பிறவாமல் எனையாள்சற் குருவாகிப்
பிறவாகித் திரமான பெருவாழ்வைத் தருவாயே
குறமாதைப் புணர்வோனே குகனே சொற் குமரேசா
கறையானைக் கிளையோனே கதிர்காமப் பெருமானே.

## பிடித்தபத்து

திருச்சிற்றம்பலம்

உம்பர்கட் கரசே யொழிவற நிறைந்த
யோகமே ஊற்றையேன் றனக்கு
வம்பெனப் பழுத்தென் குடிமுழு தாண்டு
வாழ்வற வாழ்வித்த மருந்தே
செம்பொருட் டுணிவே சீருடைக் கழலே
செல்வமே சிவபெருமானே
எம்பொருட் டுன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.

விடைவிடா துகந்த விண்ணவர் கோவே
வினையனே னுடையமெய்ப் பொருளே
முடைவிடா தடியேன் மூத்தற மண்ணாய்
முழுப்புழுக் குரம்பையிற் கிடந்து
கடைபடா வண்ணங் காத்தெனை யாண்ட
கடவுளே கருணைமா கடலே
இடைவிடா துன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மையே யப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்தவா ரமுதே
பொய்ம்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் றனக்குச்
செம்மையே யாய சிவபதம் அளித்த
செல்வமே சிவபெரு மானே
இம்மையே யுன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.

அருளுடைச் சுடரே அளிந்ததோர் கனியே
பெருந்திறல் அருந்தவர்க் கரசே
பொருளுடைக் கலையே புகழ்ச்சியைக் கடந்த
போகமே யோகத்தின் பொலிவே
தெருளிடத் தடியார் சிந்தையுட் புகுந்த
செல்வமே சிவபெரு மானே
இருளிடத் துன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.

ஒப்புனக் கில்லா வொருவனே அடியேன்
உள்ளத்து ளொளிர்கின்ற வொளியே
மெய்ப்பத மறியா வீறிலி யேற்கு
விழுமிய தளித்ததோர் அன்பே
செப்புதற் கரிய செழுஞ்சுடர் மூர்த்தி
செல்வமே சிவபெருமானே
எய்ப்பிடத் துன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவதினியே.

அறவையேன் மனமே கோயிலாக் கொண்டான்
டளவிலா ஆனந்தம் அருளிப்
பிறவிவே ரறுத்தென் குடிமுழு தாண்ட
பிஞ்ஞகா பெரியவெம் பொருளே
திறவிலே கண்ட காட்சியே அடியேன்
செல்வமே சிவபெருமானே
இறவிலே யுன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாசவே ரறுக்கும் பழம்பொருள் தன்னைப்
பற்றுமா றடியனேற் கருளிப்
பூசனை யுகந்தென் சிந்தையுட் புகுந்து
பூங்கழல் காட்டிய பொருளே
தேசுடை விளக்கே செழுஞ்சுடர் மூர்த்தீ
செல்வமே சிவபெரு மானே
ஈசனே யுன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.

அத்தனே அண்ட ரண்டமாய் நின்ற
ஆதியே யாதுமீ றில்லாச்
சித்தனே பக்தர் சிக்கெனப் பிடித்த
செல்வமே சிவபெருமானே
பித்தனே யெல்லா வுயிருமாய்த் தழைத்துப்
பிழைத்தவை யல்லையாய் நிற்கும்
எத்தனே யுன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந்தருளுவ தினியே.

பாலினைந் தூட்டுந் தாயினுஞ் சாலப்
பரிந்துநீ பாவியே னுடைய
ஊனினை யுருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்த மாய
தேனினைச் சொரிந்து புறம்புறந் திரிந்த
செல்வமே சிவபெரு மானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.

புன்புலால் யாக்கை புரைபுரை கனியப்
பொன்னெடுங் கோயிலாப் புகுந்தென்
என்பெலாம் உருக்கி எளியையா யாண்ட
ஈசனே மாசிலா மணியே
துன்பமே பிறப்பே இறப்பொடு மயக்காத்
தொடக்கெலாம் அறுத்தநற் சோதீ
இன்பமே யுன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவங்கமாலை

தலையே நீ வணங்காய் — தலை மாலை தலைக் கணிந்து
தலையாலே பலிதேருந் தலைவனைத் தலையே நீ வணங்காய்
கண்காள் காண்மின்களோ — கடல் நஞ்சுண்ட கண்டன் றன்னை
எண்டோள் வீசி நின்றாடும் பிரான்றன்னைக் கண்காள்
காண்மின்களோ
செவிகாள் கேண்மின்களோ — சிவன் எம்மிறை செம்பவள
எரிபோன் மேனிப் பிரான்றிற மெப்போதும் செவிகாள்
கேண்மின்களோ
மூக்கே நீ முரலாய் — முது காடுறை முக்கணனை
வாக்கே நோக்கிய மங்கை மணாளனை மூக்கே நீ முரலாய்
வாயே வாழ்த்து கண்டாய் — மத யானை யுரிபோர்த்துப்
பேய்வாழ் காட்டகத் தாடும் பிரான்றன்னை வாயே வாழ்த்து
கண்டாய்

நெஞ்சே நீ நினையாய் — நிமிர் புன்சடை நின்மலனை
மஞ்சாடும் மலை மங்கை மணாளனை நெஞ்சே நீ நினையாய்
கைகாள் கூப்பித் தொழீர் — கடி மாமலர் தூவிநின்று
பைவாய்ப் பரம்பரை யார்த்த பரமனைக் கைகாள் கூப்பித் தொழீர்
ஆக்கையாற் பயனென் — னரன் கோயில் வலம் வந்து
பூக்கையாலட்டிப் போற்றியென்னாத விவ் ஆக்கையாற் பயனென்ன
கால்களால் பயனென் — கறைக் கண்டனுறை கோயில்
கோலக் கோபுரக் கோகரணஞ்சூழாக் கால்களால் பயனென்
உற்றார் ஆருளரோ — உயிர் கொண்டு போம் பொழுது
குற்றாலத்துறை கூத்தனல்லானமக் குற்றார் ஆருளரோ
இறுமாந்திருப்பன் கொலோ — ஈசன் பல்கணத் தெண்ணப்பட்டுச்
சிறுமானேந்தி தன்சேவடிக் கீழ்ச்சென்று இறுமாந்திருப்பன்
கொலோ
தேடிக் கண்டு கொண்டேன் — திருமாலொடு நான்முகனும்
தேடித் தேடொணாத் தேவனை யென்னுள்ளே தேடிக் கண்டு
கொண்டேன்.

உற்றாரிலாதார்க்கு உறுதுணையாவன ஓதிநல்நூல்
கற்றார் பரவப் பெருமையென காதல் செய்ய
கிற்பார் தமக்குக் கிளர்ஒளியான கந்தம் கொடுக்கும்
அற்றார்க்கு அரும்பொருள் காண்கவை ஐயாறன் அடித்தலமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓதியஞானமும் ஞானப் பொருளும் ஒலிசிறந்த
வேதியர் வேதமும் வேள்வியும் ஆவன விண்ணும் மண்ணும்
சோதியும் செஞ்சுடர் ஞாயிறும் ஒப்பனதூவெண் மதியோடு
ஆதியும் அந்தமும் ஆன ஐயாறன் அடித்தலமே.

வெள்ளத்துள் நாவற்றி ஆங்குன் அருள் பெற்று
துன்பத்துள் நின்றும் விள்ளக்கிலேனை விடுதிகண்டயே
விரும்பும் அடியாருள்ளத்துள்ளாய் மன்னு முத்தரகோச
மங்கைக்கரசே கள்ளத்துள் ளேற்கருளாய் களியாத
களியெனக்கே.

களிவந்த சிந்தையொடுன் கழல் கண்டிடுங் கலந்தருள
வெளிவந்திலேனை விட்டிடுதி கண்டாய் மெய்ச் சுடருக்கெல்லாம்
ஒளிதந்த பூய்கழல் உத்தரகோச மங்கைக்கரசே
எளிவந்த எந்தை பிரானென்னை ஆளுடை என்னப்பனே.

என்னை அப்பா அஞ்சேவென்பவம் இன்றி நான்றெய்த் தலைந்தேன்
மின்னை யொப்பாய் விட்டிடுதிகண்டாயு வமிக்கின்
மெய்யே யுன்னை ஒப்பாய் மன்னுமுத்தரகோச மங்கைக்கரசே
அன்னை ஒப்பாய் எனக்கு அத்தன் ஒப்பாயென் அரும்பொருளே.

வேண்டத் தக்கது அறிவோய் நீ
வேண்ட முழுதும் தருவோய் நீ
வேண்டின யன்மார்க் கரியோய் நீ
வேண்டி என்னைப் பணிகொண்டாய்
வேண்டி நீ யாதருள் செய்தாய்
யானும் அதுவே வேண்டில் அல்லால்
வேண்டும் பரிசு ஒன்று உண்டுஎனில்
அதுவும் உன்தன் விருப்பு அன்றே.

கோலமா மங்கை தன்னைக் கொண்டொரு கோலமாம்
சீலமேயறிய மாட்டேன் செய்வினை மூடிநின்று
ஞாலமாமி தனில்என்னை நைவியா வண்ணம் நல்காய்
ஆலமாம் நஞ்சமுண்ட ஆவடுதுறை உளானே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்தனை நின் தனக்காக்கி நாயினேன் தன்
கண்ணிணை நின் திருவாதப் போதுக்காக்கி
வந்தனையும் அம்மலர்க்கே யாக்கி
வாக்குஉன் மணிவார்த்தைக்காக்கி ஐம்புலன்களார
வந்தனை ஆட்கொண்டுள்ளே புகுந்துவிச்சை
மாலமுதப் பெருங்கடலே மணியே உன்னைத் தந்தனை
செந்தாமரைக் காடனைய மேனித் தனிச்சுடரே
இரண்டுமில் தனிய னேற்கே.

அருந்துணையை அடியவர் தம்அல்லல் தீர்க்கும்
அருமருந்தை அகல் ஞானத் தகத்துள் தோன்றி
வருந்துணையும் சுற்றமும் பற்றும் விட்டு
வான்புலன் களாகத்தடக்கி மடவாரொடும்
பொருந்தணைமேல் வரும்பயனைப் போகமேற்றிப்
பொதுநீக்கித் தனை நினைய வல்லார்க்கென்றும்
பெருந்துணையைப் பெரும்பற்றப் புலியூரானைப்
பேசாத நாள் எல்லாம் பிறவா நாளே.

அண்ணலே எனை யாண்டுகொண் டருளிய அமுதே
விண்ணிலே மறைந்தருள்புரி வேத நாயகனே
கண்ணினால் கயிலையில் இருந்த நின்கோலம்
நண்ணி நான் பெற நயந்தருள் புரியேன்.

பொன்னார் திருவடிக்கொன் றுண்டுவிண் ணப்பம்
போற்றி செய்யும் என்னாவி காப்பதற்கு இச்சையுண்டேல்
இருங்கூற்றுஅகல மின்னாரு விலைச்சூலம் என்மேற்பொறி
மேவுகொண்ட
துன்னார் கடந்தயுன் தூங்கானை மாடச்சுடர் கொழுந்தே.

## கந்தரநுபூதி

நெஞ்சக் கனகல் லுநெகிழ்ந் துருகத்
தஞ்சத் தருள்சண் முகனுக் கியல்சேர்
செஞ்சொற் புனைமா லைசிறந் திடவே
பஞ்சக் கரவா னைபதம் பணிவாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆடும் பரிவே லணிசே வலெனப்
பாடும் பணியே பணியா யருள்வாய்
தேடுங் கயமா முகனைச் செருவிற்
சாடுந் தனியா னைசகோ தரனே. 1

செம்மான் மகளைத் திருடுந் திருடன்
பெம்மான் முருகன் பிறவா னிறவான்
சும்மா விருசொல் லறவென் றலுமே
யம்மா பொருளொன் றுமறிந் திலனே. 2

முருகன் குமரன் குகனென் றுமொழிந்
துருகுஞ் செயறந் துணர்வென் றருள்வாய்
பொருபுங் கவரும் புவியும் பரவுங்
குருபுங் கவவெண் குணபஞ் சரனே. 3

உருவா யருவா யுளதா யிலதாய்
மருவாய் மலராய் மணியா யொளியாய்க்
கருவா யுயிராய்க் கதியாய் விதியாய்க்
குருவாய் வருவா யருள்வாய் குகனே. 4

## கந்தரலங்காரம்

ஆவிக்கு மோசம் வருமாறறிந்து னருட் பதங்கள்
சேவிக்க வென்று நினைக்கின்றிலேன் வினைதீர்த் தருளாய்
வாவித்தட வயல்சூழுந் திருத்தணி மாமலைவாழ்
சேவற்கொடி யுடையானே அமர சிகாமணியே.

மைவரும் கண்டத்தர் மைந்த கந்தா என்று வாழ்த்துமிந்தக்
கைவரும் தொண்டன்றி மற்றறியேன் கற்ற கல்வியும்போய்
பைவரும் கேளும் பதியும் கதறப் பழகி நிற்கும்
ஐவரும் கைவிட்டு மெய்விடும்போது உன் அடைக்கலமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருமூலர் திருமந்திரம்

அன்பு சிவம் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவ தாரும் அறிகிலார்
அன்பே சிவமாவ தாரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந் தாரே.

## பட்டினத்தார்

என்செயலாலாவது யாதொன்றுமில்லை இனித்தெய்வமே
உன்செயலே என்றுணரப் பெற்றேனிந்த ஊனெடுத்த
பின்செய்த தீவினையாதொன்று மில்லைப் பிறப்பதற்கு
முன்செய்த ஊழ்வினையோ இங்ஙனே வந்து மூண்டதுவே.

## காரைக்கால் அம்மையார் புராணம்

இறவாத இன்ப அன்பு வேண்டிப் பின் வேண்டுகின்றார் பிறவாமை வேண்டும்
மீண்டும் பிறப்புண்டேல் உன்னை என்றும் மறவாமை வேண்டும்
இன்னும் வேண்டும் நான் மகிழ்ந்து பாடி அறவா
நீ ஆடும் போது உன் அடியின் கீழ் இருக்க.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மஹோற்சவ காலத்தில் ஓத வேண்டிய பண்கள்

| ஸ்தானம் | பண் | குறித்த பண்ணிலமைந்த சில தேவாரங்கள் |
|---|---|---|
| 1. கணபதி தளத்தின் போது (கொடிமரத்தருகில்) | தக்கராகம் | 1. மடையில் வாளை பாய (சம்பந்தர்) |
| | | 2. நெய்யும் பாலும் தயிரும் ,, |
| | | 3. துணிவளர் திங்கள் ,, |
| 2. மூஷிகதளத்தின் போது (கொடிமரத்தருகில்) (விருஷப தளத்துக்கும் இதுவே) | காந்தார பஞ்சமம் | 1. மந்திரம் நான்மறையாகி (சம்பந்தர்) |
| | | 2. இடரினும் தளரினும் ,, |
| | | 3. துஞ்சலும் துஞ்சலிலாத ,, |
| | | 4. சொற்றுணை வேதியன் ,, |
| | | 5. நனவினும் கனவினும் ,, |
| 3. சிம்மதாளம் (கொடிமரத்தருகில்) | நட்டபாடை | 1. தோடுடைய செவியன் (சம்பந்தர்) |
| | | 2. மூவரென இருவரென (சுந்தரர்) |
| 4. மயூர தாளம் (கொடிமரத்தருகில்) | இத் தளம் | 1. சடையாயெனுமால் (சம்பந்தர்) |
| | | 2. பித்தா பிறை சூடி (சுந்தரர்) |
| | | 3. ஒன்றுக்கெலாம் (அப்பர்) |
| 5. பிரம்சந்தி (மத்தி) | மேகராகம் | 1. புலனைந்தும் பொறிகலங்கி (சம்பந்தர்) |
| | | 2. செல்வ மல்கிய செல்வர் ,, |
| | | 3. நீறு சேர்வதோர் ,, |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | ஸ்தானம் | பண் | தேவாரங்கள் | |
|---|---|---|---|---|
| 6. | இந்திர சந்தி (கிழக்கு) | காந்தாரம் | 1. மந்திரமாவது நீறு | (சம்பந்தர்) |
| | | | 2. மாதர்பிறைக் கண்ணியானை | (அப்பர்) |
| | | | 3. கைப்பொது மலர் தூவி | ,, |
| 7. | அக்கினி சந்தி (தென்கிழக்கு) | கொல்லி | 1. மண்ணில் நல்ல வண்ணம் | (சம்பந்தர்) |
| | | | 2. கூற்றுயினவாறு | (அப்பர்) |
| | | | 3. தம்மையேபுகழ்ந்து | (சுந்தரர்) |
| 8. | யமசந்தி (தெற்கு) | கௌசிகம் | 1. காதலாகி கசிந்து | (சம்பந்தர்) |
| | | | 2. ஆதியந்தமாயினுய் | ,, |
| 9. | நிருதிசந்தி (தென்மேற்கு) | நட்டபாடை | 1. உண்ணுமுலை உமையாள் | (சம்பந்தர்) |
| | | | 2. கொன்று செய்த கொடுமை | (சுந்தரர்) |
| | | | 3. தோடுடைய செவியன் | (சம்பந்தர்) |
| 10. | வருண சந்தி (மேற்கு) | சீகாமரம் | 1. கள்ளார்ந்த பூங்கொன்றை | (சம்பந்தர்) |
| | | | 2. நீ நாளும் நன்னெஞ்சே | ,, |
| | | | 3. கண்காட்டு நுதலானும் | ,, |
| 11. | வாயுசந்தி (வடமேற்கு) | தக்கேசி | 1. பூவார் மலர் கொண்டு | (சம்பந்தர்) |
| | | | 2. ஆலந்தானுகந்து | (சுந்தரர்) |
| 12. | குபேர சந்தி (வடக்கு) | தக்கராகம் | 1. பொடியுடைமார்பினர் | (சம்பந்தர்) |
| | | | 2. வைத்தனன் தனக்கே | (சுந்தரர்) |
| | | | 3. துணிவளர் திங்கள் | (சம்பந்தர்) |
| 13. | ஈசான சந்தி (வடகிழக்கு) | சாலாபாணி (சாதாரி) | 1. எந்தமது சிந்தை | |
| | | | 2. தலையே நீ வணங்காய் | |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



திரு. சங்கரப்பிள்ளை மண்டலநாயகம்

தோற்றம்
28-06-1909

மறைவு
11-03-1973

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

கனக தண்டிகை கனகராஜ முதலியார்

வழிவந்த

சுன்னுகம்

## பூதத்தம்பி சங்கரப்பிள்ளையின்

ஏகபுத்திரன்

காலஞ்சென்ற விதானையார்

## திரு. மண்டலநாயகம் அவர்களின்

பிரிய பத்தினி

# திருமதி இரத்தினதேவி

அவர்கள் பேரிற்கூறிய

# இரங்கற்பா

தோற்றம் 11-1-1918 ஒடுக்கம் 17-5-1988

## வெண்பா

சீர்விபவ வைகாசி சேர்பூர்வ செவ்வாயும்
ஏர்துதியை ரோகிணியு மேற்றமுற — ஆர்வமொடு
மேவினுள் ஈசனடி மேலா மிரத்தின
தேவியென உள்ளத்தில் தேர்.

## ஆசிரியப்பா

சீருறத் திகழும் செந்தமிழ் நாடாம்
பேருறு யாழ்பதி பிறங்கிடுதிலதமாம்
இளவாலையென்னும் இனிய ஊரில்
செல்வம் கல்வி சிறந்திடப் பெற்றவர்
அடிமை குடிமை அமையப் பெற்றவர்
தண்டிகை முதலியார்; தம்வழி யுதித்த
செல்லப்பாவெனும் சீரிய பெரியோன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருது புன்னாலைக் கட்டுவன் பதியை
தன்னிடமாக்கி தகவுற வாழுநாள்
நவிலும் சங்கர நாதமுதலி
வழிவழிவந்த வளர் புகழ் நங்கை
தங்கம்மாவெனும் தையலாள் தன்னை
திருமணங்கண்டு சிறப்புறு காலை
நற்றவப் பயனாய் நானிலம் மதனில்
பெற்றிடு பெண்மகள் பிரியநன்மகள்
இரத்தின தேவியாம் இனியவள்தானே
நாளொரு வண்ணமாய் நலமுற வளர்ந்து
கல்வி செல்வம் கவினுறப் பெற்றாள்
நங்கைப் பருவம் நாடிய காலை
தந்தை தாயரின் தனிவிருப் போடு
கனக கண்டிகைக் கனகராஜ
வழிவழிவந்த வண்மையாளன்
புலவர் பண்டிதர் பொருந்திடு பதியாம்
சுன்னைப் பதியில் தோற்றிய மகிபன்
சங்கரன்தாள்பணி சங்கரப்பிள்ளை
செல்லப்பிள்ளைத் தேவியை மணந்து
இல்லறங் காத்து இன்புறப் பெற்ற
அருந்தவ மைந்தன் அன்பு இரக்கம்
பொருந்திடு புதல்வன் புண்ணிய முதல்வன்
எல்லவர் தாமும் ஏத்திப் போற்றும்
விதானையாராக விளங்கிய பெரியோன்
மண்டலநாயக மகிபன் தன்னை
திருமணமாற்றி சிறந்திடு காலை
நல்லறமாகும் இல்லறம் பேணி
சுற்றம் போற்றச் சூழ வாழ்ந்து
அற்றார் அழி பசி யாற்றி நின்றாள்
தெய்வம் கொழுநன் சேரத் தொழுது
நல்வினை ஈட்டிய நங்கை நல்லாள்
செய்தவப் பயனின் தேட்டமதாகப்
பிள்ளைச் செல்வப் பெரும் பேறாக
பத்ம லோஜினி பாவையாள் B. A.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலண்டனில் வாழும் இனியன் டாக்டர்
செல்லப்பாவும் சீர்திருஞான
சம்பந்த ரென்றே சாற்றிடு சிங்கை
பொறியியலாளர்; புகன்றிடு மினிய
ஒளஸ்திரேலியாவில் அமர்ந்து விளங்கும்
போற்றுவிக் னேஸ்வரப் பொறியிய லாரையும்
மிளிருங் கட்டிட மேற்பார்வையாளர்
கோணேஸ்வரனெனுங் குலவு மகனையும்
கமலலோஜினிக் காரிகையாளையும்
சொற்றிடு நங்கை தோகையம்பிகை
நளினலோஜனி நன்மகளாரையும்
பிள்ளைகளாகப் பெற்றுமகிழ்ந்தவள்
அவரவர் தமக்கு அரிய நற்கல்வி
தந்து வளர்த்த தாயேயாவாள்
நாயகன் பணிகள் நலமுறச் செய்து
தாயினுமினிய தாயே யானவள்
பிள்ளைகள் தமக்கு பெரிதும் மகிழ்ந்து
தக்க பருவம் சார்ந்திடு காலையாழ்
வீதியபி விருத்தி விளங்கு மதிகார
சபையின் பிரதம பொறியிய லாளர்
சொல்லும் மயிலை சுவாமி நாதர்
தந்த மைந்தன் தக்கார் போற்றும்
பாலேந்திராவெனும் பண்புடையானை
பகரும் மினிய பத்மலோஜினிக்கும்
சீர்பல்டாக்டர் சிறந்திடு சாந்தினி
தேவியார் தமக்கு செல்லப் பாவையும்
சீரார் ஆங்கிலம் செப்புமாசிரியை
புவனம்பிகையை புகல்திரு ஞான
சம்பந்தருக்கும் சாரும் மாதினி
பல்டாக்டர்தமை பகர்விக் கினேஸ்வரன்
எனும் மகன் தனக்கும், இனியனுக்கும்
சாம்பிய நாட்டில் சார்அக்கவுண்டன்
வரதராச வள்ளலாரை வளருங் கமல
லோஜினி யார்க்கும்; உலவும் கனடா

நூவல்தொழில் நுட்ப வியலாள ரான
சீர்குகதாசச் செம்மல் தம்மை
தோகையம் பிகைத் தோகை நணக்கும்
திருமணஞ் செய்து சிறப்புற வாழ
வழியே யமைத்த வனிதை யாவாள்
மக்களின் மக்களாய் மாணில மீது
சிறந்திடு பூம்பொழில் சீர்உமா பங்கன்
மகிழ்உமை மைந்தன் மன்னும் மைதிலி
ஜகம் புகழ் கஜனொடு ஜனகன் மற்றும்
பிரபு சங்கரன் பேசும் பார்க் கவி
நல்ல நிமேஜயன் நாளும் மகிழ
பேரராய்க் கண்டு பெரிதும் பேணி
இன்புற வாழ்ந்த இனிய தேவி
உற்றார் உறவினர் ஊரார் மகிழ
நல்லன செய்த நங்கை இவளே
பாக்கிய வதியின் பண்புறு நாயகன்
கனகசபையை கண்ணின் மணியாய்
அண்ணனுய்க் கண்ட அன்புத் தங்கை
பரமேஸ்வரியெனப் பகரும் பெண்ணை
விவாகம் புரிந்து விளங்கிய அமரர்
முத்துக் குமார சுவாமி முதல்வனின்
அக்கா வென்றே அணிபெற நின்றாள்
இறைவன் திருவடி என்றும் துதிப்பாள்
இல்லையென் பார்க்கு இட்டே உண்பாள்
நாயகன் பிரிவால் நலிந்துமே வாழ்ந்த
உத்தமப் பெண்ணிவள் உலகப் பற்றை
சித்தத் தகற்றி சிறந்திடு திருமகள்
விபவ வாண்டு விளங்கு வைகாசி
செவ்வாய் நான்கு சேர்ந்திடு துதியை
பூர்வம் ரோகினி பொருந்திய அந்தி
ஆறுபத் தென வாகும் நேரம்
உற்றார் உறவினர் ஊரார் புலம்ப
பெற்ற பிள்ளைகள் பேரப்பிள்ளைகள்
நன் மருமக்கள் நலிந்து கதற
எழுபதின் மேலோய் இயம்பிடுவயதில்
ஈசன்திருவடி இதயமிருத்தி
பொன்னுடு தன்னை பொருந்தினளிதே

# புலம்பல்

## சகோதரர் ( அண்ணன் )

### விருத்தம்

பிறந்தநாள் முதலாய் ஒன்றும் பிணங்கிடா தன்புசேரச்
சிறந்துமே வாழ்ந்த தங்காய் ! செப்பிடா தின்று நீயும்
இறந்துதான் சென்றதெங்கே ? இரத்தின தேவியாரே !
அறந்தனை யுருவாய்க் கொண்ட அரனடி யணுகி னீரோ

## பிள்ளைகள்

இறந்தநின் செய்திகேட்டு ஏங்கினோம் கதறி வீழ்ந்தோம்
பறந்து நாமுடலைத் தானும் பார்த்திட ஆசை கொண்டு
சிறந்திடுதாயே யிங்கு சேர்ந்தனம் எம்மை நீரும்
மறந்திட நியாயமில்லை மாயமாய் மறைந்த தென்னே

ஒழுக்கமும் பண்புஞ்சேர உயர்தரு கல்வி தந்து
அழுக்கற வாழவைத்த அம்மையே ! அந்தோ ! இன்று
பழுத்திடாக்கனியே போலப் பாரினி லுதிர்ந்தீர் ஆல
விழுதெனத் தாங்கி நின்றீர் ! விண்ணுலசெய்தினீரோ

கூடியே கலந்து பேசிக் குறைநிறை சொல்லியாறத்
தேடியே வருவோம் தாயே செப்பிட யாருமில்லை
வாடியே வருந்துகின்றோம் வாழ்வினை உதறித்தள்ளி
ஓடியே இறைவன் பாதம் ஒன்றுபட் டிருக்கின்றீரோ

## மருமக்கள்

பெற்றிடு தாயர்போலப் பேணியே யன்புகாட்டி
உற்றவை யாவுஞ்செய்து உள்ளமும் மகிழ வைத்த
நற்குண மாமி ! யெம்மை நலிவுற இங்கு விட்டு
பொற்புறு சிவனார்பாதம் பொருந்தியே மிளிர்கின்றீரே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மைத்துனிமார் புலம்பல்

### வெண்பா

அன்பு நிறை மைத்துனியே ! ஆசையொடு அன்பாக
இன்பமுறப் பேசி எங்களுடன் - துன்பகல
வந்துதவி செய்துதவும் வன்னமயில் ரத்தினமே
சுந்தரியே சென்றவிடம் சொல்.

## பேரப்பிள்ளைகள்

### வெண்பா

பாட்டி யருகிருந்து பால்பழங்கள் தந்துணவு
ஊட்டி வளர்த்தாய் உலகிலே பாட்டியே
உன்னைப்போல் எங்களுக்கு உற்றாரெவருமில்லை
இன்னலைத் தந்தகன்ற தேன்.

## பொது — விருத்தம்

1. நல்லற தருமம் யாவும் நன்மனத்தோடு செய்து
இல்லற தருமம் காத்த இரத்தின தேவியாகும்
தொல்வினை யாவும் போக்கித் துணையிறை பாதம் போற்றி
மெல்லவே கைலை தன்னை மேவினள் மேன்மை பெற்றே

2. உத்தம மாது என்று ஊரவர் உரைக்க வாழ்ந்து
பத்தியால் மக்கள் தம்மைப் பரிவொடு வளர்த்த தாயாள்
முத்தியே சேரவெண்ணி முதல்வனு மரனின் பாதம்
இத்தினம் தொழுது சேர்ந்தாள் இரத்தின தேவிதானே

3. நாயகன் சொல்லே பேணி நற்பணி யாவும் செய்து
நாயகத் தெய்வம் காத்த நாயகி ரத்ன தேவி
நாயகன் பணியே செய்யும் நன்மன விருப்பால் கைலை
நாயகன் பதிக்கே சென்றாள் நற்கதி யடைந்தா ளின்றே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேற்றம்

வெண்பா

பிறந்தா ரிறந்திடும் பேருண்மை கண்டும்
இறந்தாரை எண்ணுவதே ஈங்கு - சிறந்த
இரத்தின தேவியெனு மின்பமக ளின்று
அரனாரின் பாதமடைந் தாள்

ஆக்கம் : செஞ்சொற்புலவர் —
பண்டிதர் — ஆசிரியர்
மா . குமாரசாமி





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எல்லோருக்கும் என்றும் நல்லவர்

திருமதி மங்கையர்க்கரசி திருச்சிற்றம்பலம்
(விரிவுரையாளர், ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை கோப்பாய்)

வாழ்க்கை நிலையற்றது என்ற உண்மையை நாம் நன்கு உணர்ந்திருந்த போதிலும் அன்பாகப் பழகிய ஒருவர் பிரிந்துவிட்டால் நாம் சொல்லமுடியாத வேதனை அடைகிறோம். சென்ற மாதம் சிவபதம் எய்திய திருமதி இரத்தினதேவி மண்டலநாயகம் அவர்கள் எல்லோரையும் தன் நற்பண்புகளால் கவர்ந்த ஒருவர் ஆவர். அன்னார் சிறந்த வாழ்க்கைத் துணைநலமாக, பாசமிக்க தாயாக, அன்புச் சகோதரியாக, ஆதரவு நல்கும் அயலவராக விளங்கினார். அம்மையாரவர்களை எந்தக் கோணத்தில் நின்று பார்த்தாலும் அவர் நல்லவராகவே விளங்குவதற்குக் காரணம் உளத் தூய்மையும் வஞ்சனையற்ற உரையுமாகும். அன்னார் தான் பிறந்த இடத்திற்கும், புகுந்த இடத்திற்கும் பெருமை தேடித் தந்தவர் என்றால் மிகையில்லை.

அன்பான அதே சமயம் அடக்கமான' அளவான பேச்சு அவருக்கு அணிகலமாக விளங்கியது,

> பணிவுடையன் இன்சொலன் ஆதல் ஒருவற்கு
> அணியல்ல மற்றுப் பிற.

என்ற வள்ளுவர் வாக்கு அவர்பால் முற்றும் உண்மையாயிற்று. தன்னை நாடி வருபவர்களுக்கு நயம் பட உரைத்து மனம் சோர்ந்தவர்களுக்கு ஆறுதல் வார்த்தை கூறி, பிறர் குற்றம் செய்த பொழுதும் அதனைக் குணமெனக் கருதி வாழ்ந்த சிறப்பு அன்னாருக்குரியது. அம்மையார் ஒரு சிறந்த பக்தராகவும் விளங்கினார். நாயன்மார்கள் வழி நின்று இறைநாமத்தை இடையறாது கூறி, திருமுறைகளை மெய்யன்புடன் ஓதி ஆலயவழிபாட்டை நியமம் தவறாது மேற்கொண்டு ஆலயத் தொண்டுகள், திருப்பணிகள் என்பவற்றை மனமுவந்து செய்து மகிழ்ந்தார். தான் ஆலயங்களுக்கு செல்ல முடியாத சந்தர்ப்பங்களில் தனது மக்கள் அதே பணிகளைத் தொடரத்தக்க விதமாக சமய உணர்வை ஏற்படுத்தியுள்ளமை தாய்க்குலத்துக்கு ஒரு முன் மாதிரியாக விளங்குகிறது.

வள்ளுவர் காட்டும் வாழ்க்கைத் துணை நலத்திற்கு ஏற்ப வாழ்ந்த பெருமை அவரிக்குரியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண்''

என விளங்கி அறவழி நின்று பிறர் நலம் பேணி, சுற்றம் தழுவி வாழ்ந்தார்.

'மங்கையராகப் பிறப்பதற்கே நல்ல மாதவம் செய்திட
வேண்டுமம்மா அவர்
பங்கயக் கைநலம் பார்த்தல்லவோ பாரில்
நல்லறங்கள் வளருதம்மா'

என்று கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை அவர்கள் பெண்களின் உயர்வையும், அறப்பணிகளையும் கூறுகிறார். இவ்வாறு அறநெறியைக் கடைப்பிடித்து சீரிய வாழ்க்கை வாழ்ந்து மற்றவர்களையும் வாழ வைத்த பெருமைக்குரியவர் இரத்தினவதி அம்மையார் ஆவர். தனது இல்லத்துக்கு வருபவர்களை இன்முகம் காட்டி வரவேற்று, அறுசுவை உணவை அன்புடன் கொடுத்து, சுற்றம் சூழ வாழ்ந்து, துன்பப் பட்டவர்களுக்கு துணையாக, எல்லோருக்கும் ஒரு முன்னேடியாக விளங்கினர்.

அம்மையார் 'மனையறத்தின் வேரனையராக ஆற்றிய பணிகள் காரணமாக அன்னர் குடும்பத்தவர்கள் கல்வியறிவு, உத்தியோகம், சிவாலயப்பணி, சமூகப்பணி என்பவற்றில் சிறப்புற்று விளங்குகிருர்கள். தனது மக்கள் மனை வாழ்க்கையில் சீரும் சிறப்புமாக விளங்குவதைப் பார்த்து மகிழ்ந்து, புகழ் கிடைத்த பொழுது பெருமிதமடையாமலும் அதே சமயம் மன உறுதியுடனும் தனது பணிகளை மேற்கொண்டார். ஒரு பெண் நற்பண்புகள் நிரம்பியவராக, நற்பணி ஆற்றுபவராக இருந்தால் ஒரு குடும்பம் சிறந்து விளங்கும் என்ற உண்மையை அன்னர் நிருபித்துக் காட்டியுள்ளார். பெண்கள் நல்லவர்களாக விளங்கினல், பல குடும்பங்களும், ஊர்களும் இறுதியாக நாடும் நலம் பெறும். அம்மையாருடைய அறிவுமிக்க மக்கள் உற்ற நேரத்தில் உதவும் உத்தமர்களாக, சமய, சமூகப் பணி ஆற்றுபவர்களாக விளங்கி அன்னரின் சிறப்பியல்புகளையும் புகழையும் நிலைநாட்டுவார்கள் என்ற நம்பிக்கை எமக்குண்டு.

அம்மையார் தனது மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகளுடன் மகிழ்ச்சிகரமாக வாழ்ந்து வருங்கால் இரத்தமுத்த நோயால் சிவபதமடைய நேரிட்டது. அன்னர் ஆத்மா சாந்தியடைவதாக.

ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி !!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சைவம் மிளிர்ந்த குடும்பத் தலைவி

சிவாகம சிரோமணி, கிரியா கலாப முக்தாமணி, பிரதிஷ்டாரத்தினம்

### சிவஸ்ரீ எஸ். குஞ்சிதபாதக் குருக்கள் அவர்கள்

திருமதி. இரத்தினதேவி மண்டலநாயகம் அவர்கள் சிவபதம் அடைந்து விட்டார். புன்னாலைக்கட்டுவனில் 1918 ஜனவரி 11 ஆம் திகதி பிறந்த இவர் அங்குள்ள ஆயாக்கடவைச் சித்திவிநாயகர் ஆலயத்தில் அதிக பக்தி கொண்டு விரத அனுஷ்டானங்களுடன் வணங்கி வந்தமையால் அவருக்கு வாழ்க்கையில் நற்பேறு கிட்டியது. ஆயாக்கடவைச் சித்திவிநாயகரின் பேரருளால் சுன்னாகம் விதானையார் என யாழ்ப்பாணம் முழுவதுமே பெரும் பெயர் கொண்ட பெருமானும் சுன்னாகம் மயிலணியைப் பிறப்பிடமாகக் கொண்ட காலஞ்சென்ற திரு. சங்கரப்பிள்ளை மண்டலநாயகம் அவர்களைத் தனது இல்லத்தலைவனாகக் கொண்டார். மண்டலம் விதானையார் தம்பதிகள் சுன்னாகத்துக்கு மட்டுமல்லாது யாழ்ப்பாணப் பிரதேசம் முழுவதுக்குமே முன்மாதிரியாகத் திகழ்ந்தார்கள். எந்த ஒரு காரியம் நடைபெறும் போதும் மண்டலம் விதானையார் தம்பதியர் முன்னின்று நடத்துவதில் முன்மாதிரியானவர்கள் ஆவர்.

புருஷன் எவ்வழி மனைவியும் அவ்வழியே என்பது முதுமொழி. அதற்கேற்ப புருஷன் விதானையார் வேலை பார்க்கும்போதும், சமூக சமய கடமைகளில் ஈடுபட்டுள்ளபோதும் எப்போதும் அவருக்குப் பக்கப் பலமாக இருந்து உறுதுணை புரிந்து வந்தவர் ஆவர்.

மயிலணி ஸ்ரீ விஸ்வநாதர் கோவில், முருகன் கோவில், சுன்னாகம் பிள்ளையார் கோவில்களில் திருவிழா உபயம் இவர்களுக்குண்டு. சிறந்த பயபக்தியுடன் உற்சவங்களில் இவர்கள் பிள்ளைகளுடன் வந்து பங்கு கொள்வர்: சுன்னாகம் ஐயனார், கதிரமலைச் சிவன், புன்னாலைக்கட்டுவன் பிள்ளையார் ஆகிய ஆலயங்களில் இவர்களுக்கு அதிக பக்தியுண்டு. இவர்களின் குடும்பம் பக்தி மேம்பாட்டால் நற்பிள்ளைகளைப் பெற்றுப் பெருவாழ்வு வாழும் குடும்பமாக உள்ளது. பிள்ளைகள் யாவரும் நன் நிலையில் உள்ளார்கள். அவர்கள் வெளிநாடுகளில் தொழில் பார்த்தாலும் தாயாரின் கடமைகளைச் செய்ய வந்துவிட்டார்கள். சைவ சமயம், சரியை, கிரியை, யோகம், ஞானம் என்பவற்றை வலியுறுத்திக் கூறுகின்றது. அவைகளுக்குக் கடமையே முக்கியமானது. இவ்வழியில் விரதகாலம் என்றாலும் தைப்பொங்கல், புத்தாண்டு, தீபாவளி என்றாலும், கோயில் உற்சவம் என்றாலும், வேண்டிய ஆயத்தங்களைத் தாமும் செய்து பிள்ளைகளையும் அவ்வழியில் நெறிப்படுத்தியமையால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று இவரின் கடைசிக்குமாரன் திரு. கோணேஸ்வரன் இல்லாத விழா ஒன்றுமே இல்லை எனலாம். கோவிலுக்கு மாலை வேணும் என்றாலும் இவரின் கடைசிப் பிள்ளையிடம் 'தளிஞ' நாளைக்கு ஒரு அபிஷேகம், மாலை கட்டித்தாரும்' என்று சொல்லி மாலை வாங்கிச் செல்வர். கோவிலுக்குப் பால், தயிர், பொங்கலுக்குப் பால் என்றால் இன்றும் மண்டலம் விதானையார் வீட்டிலேயே வாங்கிச்செல்வர் அங்கு சைவம் உள்ளது.

எனது குடும்பத்தோடு மிகவும் ஈடுபாடு கொண்டது விதானையார் குடும்பம் திருமதி மண்டலநாயகம் எனது மருமகனின் ஊர்க்காரி. இதனல் மருமகனுடன் அதிக நேரம் கதைப்பார். ஆலோசனைகள் கேட்பார். இலங்கை, இந்திய இராணுவக் கெடுபிடிகள் நடந்த போதெல்லாம் எனது மகளுக்கும், மருமகனுக்கும் எப்பொழுதும் உறுதுணையாக இருந்து வந்துள்ளார். திரு. மண்டலம் விதானையின் முயற்சியால் நான் சுன்னுகம் யூனியனில் முன்னர் கடமையாற்ற முடிந்தது.

பல துறைகளிலும் மண்டலம் விதானையாரின் குடும்பம் ஒரு முன்மாதிரியான குடும்பம். திருமதி. இரத்தினதேவி மண்டலநாயகம் பல வழிகளிலும் தலைசிறந்த குடும்பத்தலைவி, அவரின் ஆன்மா சாந்தியடைவதாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாயான தயாநிதி

வைத்திய கலாநிதி சி. ஜெயமஞ்ஞகரன்
(போதனு வைத்தியசாலை, யாழ்ப்பாணம்)

வானுலகும் மண்ணுலகும் வாழ மறை வாழ
பான்மை தரு செய்ய தமிழ் பார்மிசை விளங்க
ஞானமத ஐந்துகர மூன்றுவிழி நால்வாய்
ஆனைமுகனைப் பரவி அஞ்சலி செய்விப்பாம்.

மண்ணினிற் பிறந்தார் யாவரும் என்ருே ஒருநாள் இறக்க வேண்டும் என்பது நியதி. என்று பிறப்பு உண்டோ அன்றே இறப்பும் நிச்சயிக்கப்பட்டு விட்டது. குறித்த காலம் வரும்போது வந்து நம் உயிரைக் கவர்ந்து போவதனுல் 'காலன் வந்தான்' என்கின்ருேம். காலன் வருமுன்னே கண் பஞ்சடை முன்னே உள்ள காலவரையறையே நம் வாழ்நாள். இந்தப் பெறுதற்கரிய வாழ்நாளை, புன்னெறியதனிற் செல்லும் போக்கினை விடுத்து, நன்னெறி ஒழுகச் செய்து, இவ்வண்ணமேதான் வாழ வேண்டும் என்று நம் ஆன்ருேரும் சமயச் சான்ருேரும் கோடு காட்டியுள்ளார்கள். ''அறம் செய விரும்பு'' என ஔவைப்பிராட்டியாரும் "அறத்தான் வருவதே இன்பம்''... என வள்ளுவரும், வாழ்வாவது மாயம்... தாளாது அறம் செய்மின் ... என சுந்தரரும், அறநெறியில் வாழ வேண்டும் என்பதையன்ருே வலியுறுத்தியுள்ளார்கள்.

இத்தகு மேலோர் சொல்லிவைத்த அறநெறியில் வாழ்வாங்கு வாழ்ந்து, வழிகாட்டி அண்மையில் அமர வாழ்வு பெற்றவர் தான் எமது இரத்தினதேவி மண்டலநாயகம் அம்மையார் அவர்கள் அவரோடு கடந்த சில ஆண்டுகளாக நெருங்கிப் பழகும் பெருவாய்ப்பு எமக்குக் கிடைத்தது அன்னையாரது அன்பு, பண்பு, அடக்கம், கள்ளம் கபடமற்ற உள்ளம் என்பன எம்மை அவர்பால் ஈர்த்தன. எமக்கெல்லாம் இனிய தாயாக விளங்கிய அவரிடம் கன்று தாய்ப் பசுவை நாடி ஓடுவது போல் அடிக்கடி சென்று வந்தோம்

தாய்மையின் பெருஞ்சிறப்பு நோக்கியன்ருே இறைவனைப் போற்ற வந்த நம் சமய ஆசான்களெல்லாம் தாயினும் சாலப் பரிந்து ...... தாயினும் நல்ல தலைவர் ..., தாயான தத்துவனை , தாயான ஈசர்க்கே .., தாயல்லவோ நானுன் சேயல்லவோ .. , மகவு நான் நீ தாய் ..., என்றெல்லாம் மொழிந்தார்கள். தாய்மை என்ற நிலையிலே அவர் தன் மக்களிடத்தும் பிறர் மக்களிடத்தும் காட்டிய அன்பும், பரிவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருணையும் போற்றிப் பின்பற்ற வேண்டியன. எப்பொழுது எம்மை கண்டாலும் சாப்பிட்டீர்களா? இல்லை இனிப் போய்த் தானே? என்று கேட்காமல் விடமாட்டார்கள். எந்நேரமும் எம்மைக் கண்டவுடன் இன்முகம் காட்டி வரவேற்று உபசரிப்பதை நினைக்க நெஞ்சம் நெகிழ்கிறது

துரதிருஷ்டவசமாக நாட்டில் நிலவிய அமைதியற்ற சூழ்நிலையால் வெளியூர்களில் இருந்த தன் பிள்ளைகளைப் பலகாலம் காண முடியாது கலங்கினார். மிகவும் நெருக்கடியான கால கட்டங்களில் நின்று பிடித்த அம்மா இனியும் பலகாலம் வாழ்வார்கள். சென்று காணலாம் என்று அவர்களும் நிம்மதி கொண்டதில் வியப்பில்லை. சடுதியாக வந்த சுகயீனம் விரைவில் முடிவு காணும் என்று யாரும் எதிர்பார்க்கவில்லை. நோயில் படுத்திருந்த போதும் வாழ்நாள் முழுவதும் காட்டிய அதே பொறுமையுடன் இருந்தார்.

எந்த வேளையிலும் தெய்வ சிந்தனையோடு தன் கடமைகளைச் செய்து வந்தவர். எதற்கெடுத்தாலும் பிள்ளையாரே! சிவனே! முருகனே! ஐயனாரே! என்று சொல்லத் தவற மாட்டார். 'தாயைப் போல பிள்ளை' என்ற முதுமொழி இவரின் நன் மக்கள் மட்டில் முழுக்க உண்மை. தாயார் கட்டிக் காத்த நெறி முறைகள் இவரின் மக்களிடமும் பொதிந்துள்ளன. 'நல்லவராவதும் தீயவராவதும் அன்னை வளர்ப்பதிலே' .. என்று தானே இக்காலக் கவிஞனும் பாடி வைத்துள்ளான் இவர் தம் மக்களை இன்று உயர்த்துவனவும் தாயிடமிருந்து பெற்றதுவும் கற்றதுவுமான உண்மை, நேர்மை, பொறுமை ஒழுக்கம், கடமையுணர்வு ஆதியாம் அருங்குணங்களன்றோ.

நல்வாழ்வு வாழ்ந்த நம் இனிய அன்னையார் போற்றிக் காத்த நற்குணங்களையும் உயர் நெறிகளையும் ஒழுக்க ஆசாரங்களையும் வழுவாது கடைப்பிடித்து நாமும் வாழ்ந்து பிறர்க்கும் உதவுவதே அவருக்கு நாம் செய்யக்கூடிய கைம்மாறாகும். சகல செல்வ யோகம் மிக்க பெருவாழ்வு வாழ்ந்த அம்மையார் முத்தியே சேர்வதற்கு அருள்வாயே என்று எல்லாம் வல்ல முருகப் பெருமானை இறைஞ்சுவோமாக.

இன்பமே சூழ்க! எல்லோரும் வாழ்க!

துய்யதோர் மறைகளாலும் துதித்திடற் கரிய செய்வேள்
செய்ய பேரடிகள் வாழ்க! சேவலும் மயிலும் வாழ்க!
வெய்ய சூர் மார்பு கீண்ட வேற்படை வாழ்க! அன்னோன்
பொய்யில் சீர் அடியார் வாழ்க! வாழ்க இப் புவனமெல்லாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

புன்னாலைக்கட்டுவன்

# திரு. வே. தம்பு சொல்லியவை

கண்ணில் கருணை தோன்றும்
நண்ணில் நனி தோன்றும்
எண்ணில் எழில் தோன்றும்
பண்ணில் பண்ணோசை தோன்றும்
வண்ணத் துகில் வனப்புத் தோன்றும்
அண்ணல் மண்டலநாயகி அமைந்தவாறே என்று நாளும்
எல்லாரும் எங்கும் எம்மிடன் ஏசா நிற்ப
சொல்லாகு ஓங்காரதுள் பொருளான் சென்றனையோ
எங்குற்றாய் என்று ஏங்கிற்றே எம் நெஞ்சம்
இங்குற்றா ளென்று இந்திராதிவம் மினிசை
பொங்கெங்கு அங்கெலாம் பெருவிழா அதனால்
உன் பிரிவு என்றும் மறக்கமுடியாது
எவரும் மறக்க முடியாது
மண்டலநாயகியை மணிமுத்தை இரத்தினதேவியை
என்றும் எந்நாளும் எவ்வுயிரும்
மறக்கமுடியாது அகிலமுள்ளவரை
நன்றே வாழ்ந்தாய் நனி சிறந்தாய்
நற்பதம் பெற்று வாழியவே வாழியவே !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

அன்பின் திருவுருவாய் பண்பின் உறைவிடமாய் வாழ்ந்து சொற்ப காலம் சுகவீனமுற்றிருந்து சிவபதம் அடைந்த அன்னையார் திருமதி இரத்தினதேவி மண்டலநாயகத்தின் மறைவினால் ஆறாத் துயருற்றிருந்த வேளையில் எமக்கு ஆறுதல் கூறித் தேறுதல் அளித்த அனைவர்க்கும், அன்னார் சுகவீனமுற்றிருந்தபோது உதவிய சகலருக்கும், இறுதிச் சடங்குகளின்போது உதவிய, வருகை தந்த எல்லோர்க்கும் அனுதாபச் செய்திகள், மலர்வளையங்கள் அனுப்பி அஞ்சலி செய்த அனைவருக்கும், கீரிமலையில் நடந்த அந்தியேட்டிக் கிரியைகளிலும் வீட்டில் நடந்த வீட்டுக் கிருத்தியக் கிரியைகளிலும் பங்குபற்றிய சகலருக்கும், இரங்கற்பா இயற்றி உதவிய செஞ்சொற் புலவர், பண்டிதர் ஆசிரியர் திரு. மா. குமாரசாமி அவர்களுக்கும், இந் நினைவு மலரை அழகுறப் பதிப்பித்து உதவிய நியூ ஈரு பப்ளிகேஷன்ஸ் நிறுவனத்தாருக்கும் வேறும் பல வழிகளில் உதவிய உறவினர், அயலவர், நண்பர்கள் யாவர்க்கும்

**எமது உளமார்ந்த நன்றி**

மக்கள்
மருமக்கள்
பேரப்பிள்ளைகள்

நியூ ஈரு பப்ளிகேஷன்ஸ் லிமிட். — யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org